**தலைப்பு 158 – அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தலைப்பு 158 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் தனது திணைக்களத்தின் சகல பணக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 158 – அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 09 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி நடவடிக்கைகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.2 |
| | | 2. | மிகை நிதியேற்பாடு | 2.4 |
| | | 3. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை | 2.1.2(ஆ) |
| | | 4. | எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை | 2.1.2(ஆ) |
| | | 5. | பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை | 2.5 |
| | | 6. | கட்டிடங்களை வாடகைக்கு எடுப்பதிலான குறைபாடுகள் | 2.3(ஆ) |
| 127(3) | சுய நிர்வாக திறைமை மற்றும் அறிவினை பயன்படுத்தி பொருத்தமான முறையில் | 1. | வாகனப் பயன்பாட்டிலான குறைபாடுகள் | 2.3(அ) |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படக்கூடிய வகையில் சந்தேகமொன்று அல்லது எழுந்துள்ள அனைத்து பிரச்சினைகளும் தமக்கு முன்வைக்கப்படும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல். | 2. வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல் | 2.3(இ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சில் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்ட தொகை மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் பாரதூரமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளை சமர்ப்பிக்காமை | 2.1.3(அ)(ஆ) |

## 2 பொருண்மையான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த வங்கி நிதி, காப்புறுதி மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் பிரிவிற்குரிய எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறியிருந்தனவா என்பதை பரிசீலிப்பதற்குரிய முறையில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தை மீள்கட்டமைப்பதற்காக வருடந்த பாதீட்டு மதிப்பீடுகளினூடாக ரூபா 12 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கும் அதற்குரிய செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் எந்தவிதமான பணியும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளாமை

---

(i) நட்டத்தில் இயங்கும் முயற்சிகளை இனங்கண்டு அவற்றை ஒட்டு மொத்த தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பொன்றினை வழங்கக்கூடிய வகையில் மீள்கட்டமைப்பதற்குரிய நடைமுறைகளை இனங்காணலும் தேவையான வழிகாட்டல்களுக்கான வழங்குதலும் அமைச்சின் பிரதான நோக்கமாக இருந்தது. அதன் பிரகாரம் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 05 பெருந்தோட்டக் கம்பனிகளின் மீள்கட்டமைப்பு நடைமுறைக்கமைய பயிரிட முடியாத காணிகளையுடைய கம்பனிகள் “அரச மற்றும் தனியார் பங்குபற்றல் (PP)” செயற்திட்ட முன்மொழிவினை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை 2018 சனவரி 22 ஆந் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இதுவரையிலும் அதற்கான அனுமதி வழங்கப்பட்டிராததுடன் இந்த கம்பனிகளுக்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 214.10 மில்லியன் கூட்டுத்தொகையும் அபிவிருத்திப் பணிகளுக்காக ரூபா 2,906.63 மில்லியனும் அரச பாதீட்டின் மூலம் செலவிடப்பட்டிருந்தது.

(ii) அமைச்சின் கீழ் காணப்படும் 02 கைத்தொழில்களுக்கான மீள்கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கம்பனிக்கு சொந்தமான காணிகளை சட்டரீதியாக அரசிற்கு சுவீகரித்து புதிய இடமொன்றில் மீண்டும் ஸ்தாபிப்பதற்குரிய அமைச்சரவை விஞ்ஞாபனம் அமைச்சரவை உபகுழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், 2018 யூன் மாதம் வரையிலும் அந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மற்றைய கைத்தொழிலான பீங்கான் கூட்டுத்தாபனம் தொடர்பில் நிகழ்ந்துள்ள முறைகேடுகள், ஒழுக்காற்று விசாரணைகள் மற்றும் வளங்களை முறையாக ஈடுபடுத்தல் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு 2017 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் அறிக்கையும் 2018 யூன் மாதம் வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள் நிதியாண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய 46 செயலாற்றல் அறிக்கைகள் 2018 ஆகஸ்ட் 03 ஆந் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், 9 அறிக்கைகள் மாத்திரம் முன்வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கைகளை தயாரித்தல் அமைச்சின் நோக்கமொன்றாவதுடன், 05 பெருந்தோட்ட கம்பனிகளின், 02 அரச வங்கிகளினதும் 02 தொழிற்சாலைகளினதும் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் 02 கம்பனிகளில் வருடாந்த அறிக்கைகள் 2013 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(உ) வழிகாட்டிக்கமைய பிரதான பெறுகைகள் திட்டமானது 06 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியினுள் நாளதுவரையாக்கப்படாமையால் குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள ரூபா 44 மில்லியன் தொகையான பெறுகைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.3 வழிகாட்டிக்கமைய உரிய மாதிரிக்கமைய பொருட்கள், சேவைகள் பணிகளுக்கான அனைத்து பெறுகைகளும் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளாமை**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கமைய அமைச்சிற்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கட்டிடங்களை வாடகைக்கு எடுப்பதிலான குறைபாடுகள்**

அமைச்சினால் வருடாந்தம் ரூபா 94.81 மில்லியன் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடமொன்றில் அலுவலகம் நடாத்திச் செல்லப்படுவதுடன், அந்த கட்டிடத்தின் ஒட்டுமொத்த வாகனம் நிறுத்தி வைக்கக்கூடிய இயலளவு 22 வாகனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன், அமைச்சிற்கு சொந்தமான 32 வாகனங்களை தரித்து வைப்பதற்கு போதுமான அளவு வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்திக்கமைய 2017 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2018 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் மெய்மையாய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 03 வருட காலப்பகுதியில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காணப்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2015 | மீண்டெழுபவை | 24.93 | 17.60 | 07.33 | 29.40 |
| | மூலதனம் | 1,181.96 | 1,172.30 | 9.66 | 0.82 |
| | **மொத்தம்** | **1,206.89** | **1,189.90** | **16.99** | **1.41** |
| 2016 | மீண்டெழுபவை | 288.78 | 267.18 | 21.60 | 7.47 |
| | மூலதனம் | 847.01 | 820.56 | 26.45 | 3.12 |
| | **மொத்தம்** | **1,138.79** | **1,087.74** | **48.05** | **4.22** |
| 2017 | மீண்டெழுபவை | 295.05 | 279.11 | 15.94 | 3.2 |
| | மூலதனம் | 9,668.98 | 1,270.19 | 8,398.79 | 86.86 |
| | **மொத்தம்** | **9,964.03** | **1,549.30** | **8,414.73** | **84.45** |

மீளாய்வு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதிஏற்பாடு**

(i) உத்தியோகபூர்வ இல்லத்தினை பழுதுபார்க்கும் ஒப்பந்தத்திற்காக 02 குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் ரூபா 65.83 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 51.5 மில்லியன் எஞ்சியிருந்தது.

(ii) செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 12 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடும் எஞ்சியிருந்தது.

(iii) 10 செலவின விடயங்களுக்காக ரூபா 883 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 1,222 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 31 சதவீதம் முதல் 70 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

**2.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணுதல்**

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | | உரிய நிதிப்பிரமாணங்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) இன் 11 ஆம் அத்தியாயம் |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |

## 2.6 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

அமைச்சில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 71 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 15 | 08 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 43 | 30 | 13 |
| (iv) | ஆரம்ப நிலை | 31 | 27 | 04 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 02 | 02 | - |
| | மொத்தம் | 103 | 77 | 26 |

மேற்படி பதவியணிக்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது அமைச்சின் பதவியணிக்குரிய 42 பேர் அமைச்சில் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.